
# ???????? ???????????????
# ??????????????????? ???????? ??????




பிரித்தானியாவில் உண்மைக்கும் நீதிக்கான உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுவரும் திருமதி அம்பிகை செல்வகுமாருக்கு நாம் தமிழர் கட்சியின் தலைவர் செந்தமிழன் சீமான் புரட்சிக வாழ்த்துக்களை மெய்நிகர் செயலியின் மூலம் (zoom) சற்றுமுன்னர் தெரிவித்தார்.

அத்தோடு அவரது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட குறித்த போராட்டத்தை உலக அரங்கி இணைய ஊடகங்கள் மூலம் மிக விரைவாக பரப்புதல் செய்யுமாறு உலகெங்கும் பரந்துவாழும் தமிழர்களிடம் கோரிக்கை விடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

---

# ???????????????? ???????????????
# ?????????? ????????????




காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச சந்தித்து கலந்துரையாடவுள்ளார் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் விடுத்துள்ள அறிவிப்பானது ஜெனிவாவுக்காக அரங்கேற்றப்படும் கண்துடிடைப்பு நாடகமாகும் – என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்காக குரல் கொடுக்கும் சமூக செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் ஏற்பாட்டாளருமான அருட்தந்தை மா. சக்திவேல் தெரிவித்தார்.

காணாமற்போனோரின் உறவினர்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ விரைவில் சந்திக்கவுள்ளார் எனவும், காணாமற்போனோர் பிரச்சினையை முடிவிற்குக் கொண்டு வரும் வகையிலும், குடும்பத்தினருக்கு தீர்வை வழங்குவதற்காகவும் இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது எனவும் வெளிவிவகா அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார் என 'த ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதியிடமிருந்து சந்திப்புக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதா, அவ்வாறு விடுக்கப்பட்டால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் செல்வார்களா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அருட்தந்தை இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஜெனிவாத்தொடரில் அழுத்தங்கள் குவிவதாலும், வெளிநாடுகளை சமாளிப்பதற்காகவுமே இப்படியான அறிவிப்பை விடுத்து கண்துடைப்பு நாடகத்தை அரங்கேற்றுவதற்கு முயற்சிக்கின்றனர். ஜனாதிபதி அழைத்தார் என்பதற்காக எம்மால் பேச்சுக்கு செல்ல முடியாது.

படையினரிடம் சரணடைந்தவர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர் என்பதனை முதலில் அரசு ஏற்கவேண்டும், அவர்கள் எங்கு உள்ளனர் என குறிப்பிட வேண்டும். அதுமட்டுமல்ல காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் படங்கள் வெளியாகியிருந்தன. அவர்கள் எங்கே என்ற வினாவுக்கும் விடை வேண்டும். இவற்றுக்கு சாதகமான சமிக்ஞை வெளியிடப்படால் மாத்திரமே சந்திப்புக்கு செல்வது பயனுடையதாக இருக்கும்." – என்றார்.

# ??????????????? ?????? ????????????
# ????????????? ??????? ???? !



கிளிநொச்சி – வட்டக்கச்சி பிரதேசத்தில் தனது மூன்று பிள்ளைகளையும் அணைத்துக் கொண்டு கிணற்றுக்குள் தாய் ஒருவர் குதித்த நிலையில் அவர் மட்டும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

இதில் உயிரிழந்த ஒரு பிள்ளையின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ள நிலையில், ஏனைய குழந்தைகளின் உடல்களை எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கணவருடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே குறித்த சம்பவம் இடம்பெற்றதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இருப்பினும் இந்த சம்பவம் குறித்து தர்மபுரம் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

---

# ??????????? ????????? ???? ?????????
# ?????????? – 5??? ????






இனப்படுகொலை புரிந்த இலங்கை அரசை சர்வதேச நீதிமன்றில் நிறுத்தல் உட்பட்ட நான்கு அம்ச கோரிக்கைகளை பிரித்தானிய அரசிடம் முன்வைத்து, தமிழ் மக்களின் பிரதிநிதியாக திருமதி. அம்பிகை செல்வகுமாரினால் முன்னெடுக்கப்பட்டு வரும் அகிம்சை வழியிலான உணவு தவிர்ப்பு போராட்டம் இன்று 5 ஆவது நாளை (03.03.2021) எட்டியுள்ளது.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் அகிம்சை வழியில் உயிர் தியாகங்களை புரிந்த தியாக தீபங்களான திலீபன், அன்னை பூபதி ஆகியோரை வணங்கி அம்பிகை செல்வகுமார் இன்றய நாளினை தொடர்ந்துள்ளார்.

உடல் நிலை மிகவும் மோசமடைந்து தளர்ந்துள்ள நிலையிலும் தனது கோரிக்கைகளில் ஒன்றையாவது பிரித்தானிய அரசு நிறைவேற்ற வேண்டும் அதுவரை தனது போராட்டம் தொடரும் என தெரிவித்துள்ளதுடன்

உலகெங்கிலுமுள்ள அனைத்து தமிழ் மக்களையும் குறித்த போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறும் கோரிக்கைகளை நிறைவேற்ற தத்தம் நாட்டு பிரதிநிதிகழுக்கு அழுத்தங்களை கொடுக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

அதில் தனது நான்கு அம்சக்கோரிக்கைகள் உள்ளடக்கிய மின்னஞ்சலினை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் 47 உறுப்பு நாடுகளிற்கும் அனுப்பி வைக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். நேற்றைய நான்காம் நாள் மெய்நிகர் (Zoom) நிகழ்வில் உரையாற்றும் போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மேலும் நேற்றைய 4 ஆம் நாள் மெய்நிகர் நிகழ்வில் தென்கைலை அதீனம் தவத்திரு அகத்தியர் அடிகளார் இரணைமடு பங்குத்தந்தை மடுதீன் பத்திநாதர் மற்றும் யாழ். முஸ்லிம் இளைஞர் கழக தலைவர் என்.எம்.அப்துல்லாஹ் ஆகியோரின் மும்மத ஆசி உரைகள் இடம்பெற்றதுடன் ஈழத்தின் உணர்ச்சி கவிஞர் காசி ஆனந்தன் தமிழகத்திலிருந்து அனுப்பி வைத்த அம்பிகை செல்வகுமாரின் போராட்டத்திற்கான தனது ஆதரவு மன உணர்வு ஒளிப்பதிவும் ஒளிபரப்பப்பட்டது. அத்துடன் மருத்துவ நிபுணர் பேராசிரியர் சேவியர் செல்வ சுரேஷின் சிறப்புரையும் திருமதி காந்தா மற்றும் திருமதி ரேணுகா ஆகியோரின் கவிகளும் இடம்பெற்றிருந்தன.

விசேடமாக அம்பிகையின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் பிரித்தானியாவின் புறநகர் பகுதியான கொவுன்றி மற்றும் ரக்பி ஆகிய இடங்களிலிருந்து பெருமளவிலானோர் வாகனப்பேரணியாக உண்ணாவிரதம் நடைபெறும் இடத்திற்கு வருகை தந்திருந்தனர்.

இந்நிலையில் 5 ஆம் நாளாகிய இன்று அம்பிகையின் உணவு தவிர்ப்பு போராட்டத்தை மேலும் உலக அரங்கிற்கு எடுத்துச் சென்று சர்வதேசத்திற்கு அழுத்தங்களை வழங்க மெய்நிகர் செயலியின் ஊடான நிகழ்வுகள் நடைபெறவுள்ளது. பிரித்தானிய நேரம் பி.ப. 3 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வில் மதத்தலைவர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் என பல இணைந்து கொள்ளவுள்ளனர்.

அந்தவகையில் தவத்திரு வேலன் சுவாமிகள் (சிவகுரு ஆதீனம் யாழ்ப்பாணம்), அருட்தந்தை ம.சக்திவேல் (அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் தலைவர்), மௌலவி ரிஷ்வி ஆகியோரின் மும்மத ஆசீர்வாதங்களும் நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் சென்னை பல்கலைக்கழகத்தின் தமிழ் துறை பேராசிரியர் பாதிரியார் குழந்தைசாமி கனடா ஈழமுரசு பத்திரிகையின் பொறுப்பாளர்; திரு கண்ணன் ஆகியோரின் சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளன.

அதேவேளை உடல் சோர்வுற்ற நிலையிலும் திருமதி அம்பிகை செல்வகுமார் மக்களிற்கான தனது கோரிக்கை தொடர்பில் விசேட உரை நிழ்த்தவுள்ளார்.

மேற்படி மெய்நிகர் (Zoom) நிகழ்வில் நீங்களும் இணைந்து அம்பிகையின் போராட்டத்திற்கு ஆதரவு சேர்க்க பின்வரும் இணைப்பில் இணைந்துகொள்ளலாம்.

https://us02web.zoom.us/j/86153063444?pwd=U1ZiY1lIVjRtZmNwZUFWNGNzV1k1UT09

**[illegible] 4 [illegible]..**


Thayaka TV
அம்பிகை அம்மையாரின்
சாகும் வரையிலான உணவு தவிர்ப்பு
போராட்டம் வெற்றி பெறவேண்டும்..
கவிஞர் காசியானந்தன்









- 
N